தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை
விலை ரூ. 20/-
மலர் 24
இதழ் 09
ஜனவரி 2023

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்





## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு

## வங்கிக் கடன் இணைப்பு மற்றும் மணிமேகலை விருதுகளை வழங்கினார்



## மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு

# ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்து!













ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு 02.01.2023 அன்று தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சிறப்புச் செயலாளர் திரு. எம். கருணாகரன், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சித் துறை இணைச் செயலாளர் திரு. சந்திரசேகர் சகாமூரி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் டாக்டர் தாரேஷ் அகமது, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் புத்தாண்டு வாழ்த்து தெரிவித்தனர்.



திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

அன்புள்ள சகோதரிகளே,

உங்கள் அனைவருக்கும் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுய உதவிக் குழு மகளிரின் வாழ்வு வளம் பெறவும், வறுமை நீங்கவும் தமிழ்நாடு அரசு தீட்டிவரும் ஆக்கப்பூர்மான திட்டங்களை செயல்படுத்தும் உன்னத பணியை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தி வருகிறது என்பதை நான் அடிக்கடி உங்களிடம் பகிர்ந்து கொள்வேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சமீபத்தில் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள், மணிமேகலை விருதுகள் மற்றும் வங்கியாளர் விருதுகள் வழங்கி விழாப்பேருரையாற்றும் போது, எவ்வளவு அலட்சியப்படுத்தப்பட்டு, அவமானங்களுக்கு ஆளாக்கப்பட்டாலும் எடுத்த காரியத்தை முடித்தே தீருவது என்ற திடமான கொள்கையும் விடாமுயற்சியும் இருந்தால் வெற்றி கிடைத்தே தீரும். எனவே, சுய உதவிக் குழு மகளிர் சிறிதும் தளர்வின்றி தங்களின் முயற்சிகளை செய்து வந்தால், நிச்சயம் உங்களுக்கு வெற்றி கிடைக்கும், நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை" என்று உரைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி நீங்கள் ஊக்கத்துடன் தொடர்ந்து செயலாற்றி, வெற்றிகள் பலவற்றைப் பெற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது நமது துறையின் மாண்புமிகு அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதவியேற்ற நாளிலிருந்தே சுய உதவிக் குழுக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார். சமீபத்தில் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் புத்தாண்டு – பொங்கல் விற்பனைக் கண்காட்சியைத் திறந்து வைத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு அமைக்கப்பட்டிருந்த அனைத்து அரங்குகளுக்கும் சென்று பார்வையிட்டு, அங்கு இருந்த சுய உதவிக் குழு மகளிருடன் உரையாடியது சுய உதவிக் குழு மகளிருக்கு பெரிதும் மகிழ்ச்சியை அளித்துள்ளது.

இவைகளுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ''விழா நிகழ்ச்சிகளில் தனக்கு, சால்வைகள் – மாலைகள் – பூங்கொத்துகள் அளிப்பதைத் தவிர்த்து மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகளை அன்புப் பரிசாக வழங்குங்கள்'' என்று வேண்டுகோள் விடுத்திருப்பது, சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சி மீது தனக்கிருக்கும் ஆர்வத்தையும், அவர்கள் தயாரிக்கும் பொருட்களின் தரத்தின் மீதுள்ள நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

எனவே, சுய உதவிக் குழுக்கள் ஊக்கத்துடன் செயல்படுவதுடன், தாங்கள் தயாரிக்கும் பொருட்களின் தரத்துடன் எவ்வித சமரமும் செய்து கொள்ளாமல், தரமாகவும், அனைவரும் விரும்பும் வகையிலும் தயாரித்து வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(மேலாண்மை இயக்குநர்)



திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

**அன்புள்ள சுயஉதவிக்குழு சகோதரிகளே,**

சுய உதவிக் குழு மகளிர் என்றாலே சிறப்பாக செயல்படுகிறவர்கள் என்ற பெருமை இன்று உங்களுக்குக் கிடைத்துள்ளது. மாநிலத்தின் கடைகோடியில் உள்ள குக்கிராமத்தில் வசிக்கும் பெண்களைக் கூட இன்று தொழில் முனைவோர்களாக மாற்றிய பெருமை சுய உதவிக்குழு இயக்கத்திற்கு உண்டு. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக்குழுக்களின் வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டு செயலாற்றி வருகிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களும் சுய உதவிக்குழுக்களின் வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறார். அதற்கு உதாரணமாக சமீபத்தில் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற அரசு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இணைந்து, சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்புகள், மணிமேகலை விருதுகள் மற்றும் வங்கியாளர் விருதுகளை வழங்கி சிறப்பித்தனர் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரகப் பகுதியில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் வளர்ச்சிக்காக செயல்படும் ஊரக வாழ்வாதார இயக்கம் போல, தமிழ்நாட்டின் நகர்ப்புரங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கமானது செயல்பட்டு வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நகர்ப்புரங்களில் உள்ள தனிநபர் மற்றும் குழுக்களுக்கு தொழிற்பயிற்சிகளும், பயிற்சிக்குப் பின்னர் கடனுதவிகளும் பெற்றுத்தரப்பட்டு சுய தொழில் முனைவு நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்தும் செயல்பாடுகளில் முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

ஊரக மற்றும் நகர்ப்புரங்களில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக விமானநிலையங்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்கள் போன்ற இடங்களில் தமிழ்நாடு ஊரக/ நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மூலம் விற்பனை அரங்குகள் அமைக்கப்பட்டு, அவற்றில் ஊரக / நகர்ப்புர சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்திட வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

மேலும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தித் தரும் வகையில் இளைஞர் திறன் திருவிழாக்கள் நடத்தப்பட்டு. அதன் மூலம் தொழிற்பயிற்சிகள், வேலைவாய்ப்புகள், சுய தொழில் மேற்கொண்டிட நடவடிக்கைகள் போன்றவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கங்களின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் சுய உதவிக்குழுக்கள் தங்களின் செயல்பாட்டில் அதிக அக்கறை கொண்டு செயல்பட்டு வெற்றிகள் பெற்றிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்த்துகளுடன்,

அன்புடன்,

(பா. பிரியங்கா பங்கஜம்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.


மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com



tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial


"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்டாகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

## குறளும் – பொருளும்

**அறனறிந்து மூத்த அறிவுடையார்**
**கேண்மை திறனறிந்து தேர்ந்து கொளல்**

அறமுணர்ந்த மூதறிஞர்களின் நட்பைப் பெறும் வகை அறிந்து, அதனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்

# உள்ளே...


| | |
|---|---|
| அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி, சேலைகள் வழங்குதல் | 11 |
| துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் | 13 |
| அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா | 14 |
| மாவட்ட செய்திகள் | 18 |
| சுவையான தக்காளி பூண்டு சாதம் | 22 |
| சட்டம் | 26 |


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

விலை ரூ. 20/- மலர் 24 இதழ் 09

ஜனவரி 2023



கௌரவ ஆசிரியர்கள்

திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

முதன்மை செயல் அலுவலர்,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தலைமை செயல் அலுவலர்,

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,

செயல் இயக்குநர்,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

திருமதி. **எம். அருணா,** இ.ஆ.ப.,

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்

**எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு

திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW

திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல்இயக்குநர், TNCDW

**நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல்இயக்குநர், VKP

**பி. மருதாசலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW

**ஆர். சங்கர்**,கூடுதல் இயக்குநர், TNCDW

**வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

நிர்வாக ஆசிரியர்

திருமதி. **ரா. ஜீவா,** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்

திருமதி. **சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்

**வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**

முதுநிலை கணக்காளர் : திருமதி. **சு. சசிகலா**

பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**

கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**



தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**'முற்றம்',**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

அன்னை தெரசா மகளிர் வளாகம்,

வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,

நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413



முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.


## சிறுதானிய ஆண்டே வருக...

**அன்புள்ள வாசகர்களுக்கு,**

புதியதாக பிறந்திருக்கும் புத்தாண்டை புத்துணர்வுடனும் புன்னகையுடனும் வரவேற்போம். இந்த ஆண்டு அனைவருக்கும் மகிழ்ச்சியை கொடுக்கும் ஆண்டாக அமையட்டும் என வாழ்த்துகின்றோம். ஒவ்வொரு புத்தாண்டிலும் முதல் விழாவாகக் கொண்டாடுவது பொங்கல் திருநாளாகும். தமிழர்களின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் எடுத்துக்காட்டும் பெரும் அடையாளமாக விளங்குவது பொங்கல் திருநாள் ஆகும். பொங்கல் பரிசினை அறிவித்த தமிழக முதல்வர் அவர்களுக்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழ் பண்பாட்டில் சிறப்பாக விளங்குவது விருந்தோம்பல் ஆகும். முகம் அறியாதவர்கள் வந்தாலும்கூட அவர்களுக்கு தங்களிடம் உள்ள உணவை பகிர்ந்து அளிப்பதில் மகிழ்ச்சி அடைபவர்கள் தான் தமிழர்கள். இதைதான் கவிஞர் வைரமுத்து அவர்கள் தனது கவிதையில் பக்கத்து வீட்டுக்கும் சேர்த்து சமைப்பது" என தமிழர்களின் விருந்தோம்பல் பற்றி சிறப்பாக குறிப்பிட்டுள்ளார். இந்த ஆண்டு அகில உலக சிறுதானிய ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது மிகவும் வரவேற்கக்கூடிய ஒன்றாகும். அறிவியல் வளர்ச்சி அபரிமிதமாக வளர்ந்தாலும், இயற்கையை நோக்கி பயணிப்பதே மனித குலத்திற்கு சிறந்தது என்பதை உலக தலைவர்கள் உணர்ந்ததால்தான், இயற்கையான சிறுதானிய உணவுக்கு முக்கியத்துவம் கொடுத்து சிறுதானிய ஆண்டாக அறிவித்துள்ளனர்.

நமது முன்னோர்கள் காலம் காலமாக சிறுதானிய உணவை உண்டதால்தான் வலுவுடனும் உடல் நலமுடனும் வாழ்ந்து வந்தனர். கம்பு, தினை, சாமை, வரகு, கேழ்வரகு, சோளம், பச்சைப்பயறு மற்றும் உளுந்து போன்ற சிறுதானியங்களை நாம் அனைவரும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது. இது குழந்தைகளுக்கு மிகச் சிறந்த சத்தான உணவாகும். அதோடு மருத்துவ செலவையும் குறைத்துவிடும்.

எனவே, இந்த ஆண்டு சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் சிறுதானியங்களை விளைவிப்பதற்கும், சிறுதானியங்களில் பலவேறு வகை சுவையான உணவுகளை தயாரிப்பதற்கும், சிறுதானியங்களின் பயன்கள் பற்றிய விழிப்புணர்வை கொடுப்பதற்கும் முன்வர வேண்டும். உறுப்பினர்கள் அனைவருக்கும் மீண்டும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை முற்றம் தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)

ஆசிரியர், முற்றம்

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்
## மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளையும், 33 சமுதாய அமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகளையும், 8 வங்கிகளுக்கு மாநில அளவிலான வங்கியாளர் விருதுகளையும் வழங்கினார்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 29.12.2022 அன்று திருச்சிராப்பள்ளி, அண்ணா விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளையும், 33 சமுதாய அமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகளையும், 8 வங்கிகளுக்கு வங்கியாளர் விருதுகளையும் வழங்கி சிறப்பித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1989 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் முறையாக தருமபுரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் தொடங்கப்பட்டது. தற்பொழுது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் மொத்தம் 4.38 லட்சம் சுய உதவிக் குழுக்கள் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்களில் 50.24 இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். நடப்பு நிதியாண்டில் சுய உதவிக் குழுக்களுக்கு 25,000 கோடி ரூபாய் கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 16.12.2022 வரை 2,60,589 குழுக்களுக்கு ரூ. 14,120.44 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

29.12.2022 அன்று நடைபெற்ற விழாவில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு மட்டும் 2,764 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 54,654 பயனாளிகளுக்கு 78 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு மற்றும் இதர பயன்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து, தமிழகத்தின் பிற மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 2,548.04 கோடி மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்புகளை 42,081 மகளிர் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 6,48,763 பயனாளிகள் பயன்படும் வகையில் வழங்கி வருகிறார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சிறப்பாக செயல்படக் கூடிய சமுதாயம் சார்ந்த நிறுவனங்களான ஊரகப் பகுதியின் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, வட்டார அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புர பகுதியின் சுய உதவி குழுக்கள், பகுதி அளவிலான கூட்டமைப்பு, நகர அளவிலான





கூட்டமைப்பு ஆகியவற்றின் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் 2006–2007ஆம் ஆண்டு மணிமேகலை விருதுகளை அறிவித்தார்.

2021–22ஆம் ஆண்டிற்கான மணிமேகலை விருதுகளை கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டார அளவிலான கூட்டமைப்பிற்கும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கான விருதுகளை செங்கல்பட்டு மாவட்டம், ஒட்டியம்பாக்கம், கன்னியாகுமரி மாவட்டம் – பேச்சிப்பாறை, நாமக்கல் மாவட்டம் – கொன்னையார், புதுக்கோட்டை மாவட்டம் – வடுகப்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் – கீழஈரால் ஆகிய ஊராட்சிகளுக்கும், கன்னியாகுமரி மாவட்டம் – இறச்சகுளம், காஞ்சிபுரம் மாவட்டம் – கீழ்கதிர்பூர், நாமக்கல் மாவட்டம் – கோணாங்கிபட்டி, புதுக்கோட்டை மாவட்டம் – ஆயன்குடி, திருப்பத்தூர் மாவட்டம் – தேவஸ்தானம் ஆகிய கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கும்; செங்கல்பட்டு மாவட்டம் – விநாயகா, கோயம்புத்தூர் மாவட்டம் – ஜான்சிராணி, திண்டுக்கல் மாவட்டம் – ஜெயம், கன்னியாகுமரி மாவட்டம் – ஜுபிடர், நாகப்பட்டினம் மாவட்டம் – மஞ்சள் நிலா, தென்காசி மாவட்டம் – முல்லை, திருப்பூர் மாவட்டம் – ஸ்ரீ அம்மன், திருநெல்வேலி மாவட்டம் – வெக்காளி அம்மன், திருப்பத்தூர் மாவட்டம் – குறிஞ்சி மலர், விழுப்புரம் மாவட்டம் – டான்வா ஆகிய ஊரக பகுதிகளைச் சார்ந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கும்;

கன்னியாகுமரி மாவட்டம் – நாகர்கோவில் நகர அளவிலான கூட்டமைப்பிற்கும், சென்னை – காவாங்கரை மற்றும் திருவாரூர் மாவட்டம் – அஷ்டலெட்சுமி பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், அரியலூர் மாவட்டம் – ஜெய்குரு, கோயம்புத்தூர் மாவட்டம் – ஆச்சி, திண்டுக்கல் மாவட்டம் – அமிர்தாம்பாள், கன்னியாகுமரி மாவட்டம் – மல்லிகை, நாகப்பட்டினம் மாவட்டம் – பங்காரு அடிகள், நாமக்கல் மாவட்டம் – பேட்டை சுண்ணாம்புகாரத் தெரு, இராணிப்பேட்டை மாவட்டம் – அமுதம், தேனி மாவட்டம் – மதினா, திருவண்ணாமலை மாவட்டம் – சரோஜினி ஆகிய நகர்ப்புற மகளிர் சுயஉதவிக் குழுக்கள் என மொத்தம் 33 சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகள், பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் விருதுக்கான 55 இலட்சம் ரூபாய்க்கான காசோலை ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அதிக வங்கிக் கடன்களை வழங்க வங்கியாளர்களை ஊக்குவிப்பதோடு வங்கிகளுக்கிடையே ஆரோக்கியமான போட்டியை உருவாக்கும் விதமாக சிறப்பாக செயல்படும் வங்கிகள் மற்றும் கிளைகளுக்கான வங்கியாளர் விருதுகள் 2008–09 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன. 2021–22ஆம் ஆண்டிற்கான வங்கியாளர் விருதுகள் – சிறந்த பொதுத்துறை வங்கிக்கான விருது இந்தியன் வங்கிக்கும், சிறந்த தனியார் வங்கிக்கான விருது HDFC வங்கிக்கும், சிறந்த கிராம வங்கிக்கான விருது தமிழ்நாடு கிராம வங்கிக்கும், சுய உதவிக் குழுக்கள்





/ மகளிர் தொழில் முனைவோருக்கான சிறப்பு வங்கி கிளைகளில் சிறப்பாக செயல்பட்ட வங்கி கிளைகளுக்கான விருதுகளை இந்தியன் வங்கியின் காவேரிப்பட்டினம் மற்றும் சென்னை கிளைகளுக்கும், சுய உதவிக் குழுக்கள் / மகளிர் தொழில் முனைவோருக்கான சிறப்பு வங்கிகள் அல்லாத இதர வங்கி கிளைகளில் சிறப்பாக செயல்பட்ட வங்கி கிளைகளுக்கான விருதுகளை இந்தியன் வங்கியின் பாலக்கோடு மற்றும் காரிமங்கலம் கிளைகளுக்கும், தமிழ்நாடு கிராம வங்கியின் தருமபுரி கிளை ஆகிய வங்கி கிளைகளுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். இவ்விருதுடன் பாராட்டு சான்றிதழும், விருது தொகையாக 4 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும் வழங்கப்பட்டது.

இந்த விழாவில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் திரு.மு.அன்பழகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. என்.சிவா, திரு.சு.திருநாவுக்கரசர், திருமதி ஜோதி மணி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எம்.பழனியாண்டி, திரு.அ. சௌந்தரபாண்டியன், திரு.செ.ஸ்டாலின் குமார், திரு. ந. தியாகராஜன், திரு.எஸ். இனிகோ இருதயராஜ், திரு.சீ.கதிரவன், திரு.பி. அப்துல்சமது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா.பிரதீப் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன செயல் இயக்குநர் திருமதி ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப.,மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.ராஜேந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.









# முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 29.12.2022 அன்று திருச்சிராப்பள்ளி, அண்ணா விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ. 238.41 கோடி செலவில் 5635 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.308.29 கோடி மதிப்பீட்டிலான 5951 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு,மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் திரு.மு.அன்பழகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. திருச்சி என்.சிவா, திரு.சு. திருநாவுக்கரசர், திருமதி ஜோதி மணி, சட்டமன்ற உறுப்பினர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா.பிரதீப் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன செயல் இயக்குநர் திருமதி ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ‘பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்போம்’ என்பது குறித்த மணல் சிற்பத்தைப் பார்வையிடல்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 30.12.2022 அன்று பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழித்திடவும், பெண்களின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், தமிழ்நாடு அரசின் 181 மகளிர் உதவி மையத்தின் சார்பில் சென்னை, மெரினா கடற்கரையில் வடிவமைக்கப்பட்ட ‘பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்போம்’ என்பது குறித்த மணல் சிற்பத்தை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு உயர கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு.த.வேலு, துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி.ஏ.எஸ்.குமாரி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் திரு. சிற்றரசு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திரு.என்சோங்கம் ஜடக் சீரு, இ.ஆ.ப., சமூக நலத்துறை இயக்குநர் திருமதி. த. ரத்னா, இ.ஆ.ப., 181 மகளிர் உதவி மையத்தின் திட்டத் தலைவர் திருமதி ஷரின் பாஸ்கோ, மணற்சிற்பி திரு.கஜந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி, சேலைகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.1,000/- ரொக்கம் ஆகியவற்றை வழங்கிடும் பணியினை தொடங்கி வைப்பதன் அடையாளமாக, 09.01.2023 அன்று சென்னை கடற்கரை சாலை, சத்யா நகரில் உள்ள நியாயவிலைக்கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், இலவச வேட்டி, சேலைகளையும் வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் திரு.எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மை செயலாளர் திரு.தர்மேந்திர பிரதாப்யாதவ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி, சேலைகளை 09.01.2023 அன்று வழங்கி தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி, சேலைகளை இராயப்பேட்டை, மிர்ஷாஹைதர் அலிகான் தெருவில் உள்ள நியாயவிலைக் கடையில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நிலைக் குழுத்தலைவர் (பணிகள்) திரு.நே.சிற்றரசு, துணை ஆணையாளர் (மத்திய வட்டாரம்) (பொ) திரு.எம்.சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., நுகர்வோர் பணிகள் கூடுதல் பதிவாளர் திரு. சங்கர், இ.ஆ.ப., தேனாம்பேட்டை மண்டலக் குழுத்தலைவர் திரு.எஸ்.மதன்பாபு, மாமன்ற உறுப்பினர் திருமதி.வெ.ஈஸ்வரிவெங்கடேசன், இணைப்பதிவாளர்கள் திரு.எஸ்.பாபு, திருமதி.தேன்மொழி ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




# மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
# திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் தீனதயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 19.12.2022 அன்று சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்களால் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள், நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், தீனதயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் மற்றும் இல்லம் தேடி கல்வி ஆகிய திட்டங்களில் சுய உதவிக் குழு மகளிரின் பங்களிப்பு குறித்தும், அடைய வேண்டிய இலக்குகள் குறித்தும். சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் நிலை குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது, அதிக எண்ணிக்கையில் மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, அரசின் திட்டங்கள் முழுவதும் மாநிலத்தின் கடைக்கோடியில் உள்ள கிராமத்தில் செயல்படும் சுய உதவிக் குழுக்களையும் சென்றடையும் வண்ணம் செயல்பட வேண்டும் எனவும், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பாக ரூ.25,000 கோடி வழங்கப்பட நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை விரைந்து அடைந்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை சந்தைப்படுத்திடும் நடவடிக்கையில் மேலும் சிறப்பாக செயல்பட வேண்டும் எனவும், திட்டத்தின் செயல்பாடுகளை விரைவாக செய்து முடித்திட அலுவலர்கள் அடிக்கடி ஆய்வு மேற்கொள்ள வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சிறப்புச் செயலாளர் திரு.எம்.கருணாகரன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி.ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்க அலுவலர் திருமதி.எம்.அருணா, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம்





15.12.2022 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்கள் தலைமையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் திட்டங்கள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள், தலைமைப் பொறியாளர் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# உதவி இயக்குநர்களுக்கு பயிற்சி மற்றும் பணிநியமன ஆணை வழங்குதல்

20.12.2022 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைக்கு நேரடி நியமனம் வழிதேர்ச்சி பெற்ற 4 பயிற்சி உதவி இயக்குநர்களுக்கு பயிற்சி மற்றும் பணிநியமன ஆணை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மரு.தாரேஸ் அகமது, இ.ஆ.ப., துறையின் கூடுதல் இயக்குநர்கள், தலைமைப் பொறியாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

## மாண்புமிகு முதலமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் செயல்பாடுகள் ஆய்வு

திண்டுக்கல் மேற்கு ரத வீதியில் உள்ள மாநகராட்சித் தொடக்கப் பள்ளியில், மாண்புமிகு முதலமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் செயல்பாடுகளை 23.12.2022 அன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, பள்ளிக் குழந்தைகளுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். இந்நிகழ்வில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி, அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள், கூடுதல் தலைமைச் செயலாளர் (இளைஞர் நலன் மற்றும் மேம்பாட்டுத்துறை) டாக்டர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், நில நிர்வாக ஆணையர் மற்றும் அரசு சிறப்புச் செயலாளர் திரு.எஸ்.நாகராஜன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.கே.பி.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.விசாகன், இ.ஆ.ப., அவர்கள், பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு. இ.பெ.செந்தில்குமார், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி. இளமதி ஜோதிபிரகாஷ் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு, சிறப்புத் திட்டம் செயலாக்கம், வறுமை ஒழிப்பு மற்றும் ஊரக கடன் திட்டங்கள் குறித்து 23.12.2023 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் 5001 பயனாளிகளுக்கு ரூ.33.78 கோடி மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி, அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள், கூடுதல் தலைமைச் செயலாளர் (இளைஞர் நலன் மற்றும் மேம்பாட்டுத்துறை) டாக்டர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், நில நிர்வாக ஆணையர் மற்றும் அரசு சிறப்புச் செயலாளர் திரு.எஸ்.நாகராஜன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.கே.பி.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.விசாகன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின், இ.ஆ.ப., அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டம், கொடிசியா வளாகத்தில் 22.12.2022 அன்று நடைபெற்ற அரசு விழாவில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இந்நிகழ்வில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி.செந்தில்பாலாஜி அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.பி.ஆர்.நடராஜன் (கோயம்புத்தூர்), திரு. கு.சண்முகசுந்தரம் (பொள்ளாச்சி), கூடுதல் தலைமைச் செயலாளர் (இளைஞர் நலன் மற்றும் மேம்பாட்டுத்துறை) டாக்டர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி.கல்பனா ஆனந்தகுமார், மாநகராட்சி மேயர் திரு.மு.பிரதாப், இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுதவிகள் வழங்குதல்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், இ.ஆ.ப., அவர்கள், சிவகங்கை மாவட்டம், காரைக்குடி செல்லப்பா வித்யா மந்திர் சர்வதேச பள்ளியில், 24.12.2022 அன்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், கூடுதல் தலைமைச் செயலாளர் (இளைஞர் நலன் மற்றும் மேம்பாட்டுத்துறை) டாக்டர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், நில நிர்வாக ஆணையர் மற்றும் அரசு சிறப்புச் செயலாளர் திரு.எஸ்.நாகராஜன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.கே.பி.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப.,தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.மாங்குடி (காரைக்குடி), திருமதி.ஆ.தமிழரசி ரவிக்குமார் (மானாமதுரை), காரைக்குடி நகர்மன்றத் தலைவர் திரு.சோ.முத்துத்துரை மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

# திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் புத்தாண்டு – பொங்கல் விற்பனைக் கண்காட்சியினை துவக்கி வைத்தார்.




தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் புத்தாண்டு மற்றும் பொங்கல் விற்பனைக் கண்காட்சியினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 30.12.2022 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து மகளிர் சுய உதவிக்குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுப் பெட்டகங்களை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் https://tncdw.org/pages/pongalgift என்ற இணையதளம் மூலம் விற்பனை செய்யும் திட்டத்தை தொடங்கி வைத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள விற்பனை அரங்குகளைப் பார்வையிட்டு, அங்கிருந்த சுய உதவிக்குழுவினரிடம் உரையாடி, அவர்களின் தயாரிப்புப் பொருட்களை வாங்கி மகிழ்ந்தார்.

இந்நிகழ்ச்சியில், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதிமாறன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு.எம்.மகேஷ் குமார் அவர்கள், ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்துகாட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள், வாழ்ந்துகாட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்க அலுவலர் திருமதி.எம்.அருணா, இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் குழுதலைவர் மற்றும் 110வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. நே.சிற்றரசு அவர்கள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.












# ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் (RSETIs) மாநில அளவிலான குழுக் கூட்டம்

ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் மாநில அளவிலான குழுக் கூட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மை செயலாளர் திருமதி. பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் 22.12.2022 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியின் முன்னதாக RSETI மாநில இயக்குநர் திரு.அன்புக்கரசு அவர்கள் வரவேற்பு வழங்கினார்.தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி.ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் அறிமுக உரை நிகழ்த்தினார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மை செயலாளர் அவர்கள் பேசும்போது RSETI மூலம் வழங்கப்படும் பயிற்சிகள் இளைஞர்களின் தேவைக்கேற்றார் போல் அமைய வேண்டும் எனவும், பயிற்சி பெற்ற பயனாளிகளுக்கு வங்கிக் கடன் வழங்கி தொழில் முனைவோராக உருவாக்கிட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில அளவிலான வங்கியாளர்கள் குழுவின் சார்பாக உதவி பொது மேலாளர் திரு. சம்சூர் ரகுமான், NABARD வங்கியின் உதவி பொது மேலாளர் திருமதி. C. சுமித்ரா, RSETI தேசிய இயக்குநர் திரு. பிபுள் சந்திர சஹா, NACER அமைப்பின் இயக்குநர் திரு. கருணாகரா, NIRD நிறுவன இயக்குநர் திரு. சதிஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தீனதயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா (DDU-GKY) முதன்மை இயக்க அலுவலர் திரு. R.சங்கர், இணை இயக்குநர்கள் திருமதி. P. ஜெயசுதா, திருமதி. S.செல்வராணி, மாநில திட்ட மேலாளர் திரு. G.குமரன், முன்னோடி வங்கிகளின் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் இயக்குநர்கள் கலந்து கொண்டனர். நிறைவாக RSETI மூலம் பயிற்சிபெற்ற இளைஞர்களுக்கான பயிற்சி சான்றிதழ்கள் மற்றும் வங்கி கடன் உதவிகள் வழங்கப்பட்டது. மேலும், நிகழ்ச்சியின் நிறைவில் சிறப்பாக செயல்பட்ட சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனங்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது.






# மாவட்ட செய்திகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி (DDU-GKY) திட்டத்தின் சார்பில் 18 வயது முதல் 35 வயது வரை உள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழில் திறன் பயிற்சி அளிக்கும் நோக்கத்தில் இளைஞர் திறன் திருவிழா அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படுகிறது.





## வட்டார அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் சார்பில் திருமங்கலம் வட்டாரத்தில் வட்டார அளவிலான வேலைவாய்ப்பு முகாம் 27.12.2022 அன்று திருமங்கலம் வட்டார இயக்க மேலாண்மை அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த வேலைவாய்ப்பு முகாமினை மதுரை மாவட்ட மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் மதுரை மாவட்டத்தில் முன்னணியில் உள்ள 16 தனியார் நிறுவனங்களும், வேலைவாய்ப்பு வேண்டி ஏராளமான இளைஞர்கள் மற்றும் பெண்களும் கலந்து கொண்டனர். அவர்களில் 100-க்கும் மேற்பட்டோருக்கு வேலை உறுதி செய்து பணி நியமன ஆணைகளை திட்ட இயக்குநர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வில் உதவித்திட்ட அலுவலர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான சமூக வல்லுநர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில்இளைஞர் திறன் திருவிழா 14.12.2022 அன்று ஜமுனாமரத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.எஸ்.டி.சரவணன், ஆதி திராவிடர் வீட்டு வசதி நல அலுவலர் திருமதி.ஜி.ஜெயசுதா, இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் திரு.சீனுவாசன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. சக்திவேல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார இயக்க மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் உட்பட பலர் கலந்த கொண்டனர்.

இவ்விழாவில் 556க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர். அவற்றில் பயிற்சி நிறுவனங்களின் மூலம் வேலைவாய்ப்புடன் கூடிய தொழில் திறன் பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்ட165 இளைஞர்களுக்கு தேர்வு செய்யப்பட்டுமுகாமில் பயிற்சி சேர தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பயிற்சியில் சேருவதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

### மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

# திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், விழா நிகழ்ச்சிகளில்

**சால்வைகள் – மாலைகள் – பூங்கொத்துகள் அளிப்பதைத் தவிர்த்து மகளிர் சுய உதவிக்குழுக்களின் தயாரிப்புகளை அன்புப் பரிசாக வழங்குங்கள் என்று விடுத்துள்ள வேண்டுகோள்.**

விழா நிகழ்ச்சிகளில் எனக்கு, சால்வைகள் – மாலைகள் – பூங்கொத்துகள் அளிப்பதைத் தவிர்த்து மகளிர் சுய உதவிக்குழுக்களின் தயாரிப்புகளை அன்புப்பரிசாக வழங்குங்கள் !

மாண்புமிகு இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் **திரு. உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் வேண்டுகோள் !



வணக்கம்,

மாண்புமிகு முதல்வர் – நமது கழகத் தலைவர் அவர்கள், தன்னைச் சந்திக்க வருபவர்கள் புத்தகங்களை மட்டுமே அளிக்க வேண்டும், மலர் மாலை, பூங்கொத்து, பொன்னாடைகளைத் தவிர்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு, அதன்படியே செயல்பட்டு வருகிறார். அப்படி அவருக்கு வழங்கப்பட்ட புத்தகங்கள், பல்வேறு நூலகங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. தனக்கு அன்பளிப்பாக வந்த புத்தகங்களில் 1,350 புத்தகங்களைப் பள்ளிக்கல்வித்துறையின் பொது நூலகத்திற்கு அரசின் அறிவுப்பரிசாக இன்று, துறை அமைச்சரிடம் முதலமைச்சர் வழங்கியதை, நாம் அறிவோம்.

இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்றபின்னர், நானும் அப்படி அறிவித்து, எனக்கு அளிக்கப்பட்ட புத்தகங்களை, பல்வேறு அரசுப் பள்ளி நூலகங்களுக்கு அளித்துள்ளோம். அரியலூர் சென்றபோது தங்கை அனிதா பெயரில் இயங்கிவரும் நினைவு நூலகத்துக்குப் புத்தகங்களை வழங்கினோம். தற்போது சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில் அமைக்கப்படவுள்ள, நடமாடும் நூலகத்துக்கு சுமார் 2,000 புத்தகங்களை அளித்துள்ளோம். எனக்கு வரும் பரிசு – உணவுப் பொருட்களைத் தொகுதியில் உள்ள ஆதரவற்றோர் இல்லங்களுக்கு அனுப்பி வருகிறோம். ஆனால், இந்த சால்வை அணிவிப்பதும் பூங்கொத்து கொடுப்பதும் தொடரத்தான் செய்கிறது.'

ஒருவருக்கொருவர் சால்வை அணிவித்துக்கொள்வதற்கான தேவைகளை நாம் எட்டிவிட்டோம் என்றே நினைக்கிறேன். சமூக நீதி நோக்கத்தில் நாம் அடுத்தகட்டத்துக்குச் செல்ல, சில பழைய நடைமுறைகளைக் கைவிடலாம் என்பதே இதன் நோக்கம். நமது அன்புப் பரிமாற்றத்தில் புத்தகங்கள் இடம்பெற்றதன் மூலம், நாம் அடுத்தகட்ட அறிவு இயக்கத்தைத் தொடங்கி இருக்கிறோம். அதேபோல இப்போது மற்றுமொரு மாற்றத்தை அன்பு இயக்கமாகத் தொடங்கலாம் என நினைக்கிறேன்.

குறிப்பாக, தமிழகத்தில் மகளிர் மேம்பாட்டுக்கென அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மகளிர் சுய உதவிக்குழுக்களுக்குக் கடன் அளித்து, தொழிற்பயிற்சி அளித்து, அவர்களின் வாழ்க்கையில் புதிய மாற்றங்களை நிகழ்த்தி வருகிறது. அந்த இயக்கத்தில் நாமும் பங்குபெற முடியும்.

தமிழகம் முழுவதும் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்கள், பல்வேறு பொருட்களை தயாரித்து வருகின்றனர். சிறுதானியங்களில் மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள், மெழுகுவர்த்தி, அழகுக்கைவினைப் பொருட்கள், வெள்ளிக் கொலுசுகள், தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மைகள், மரச்சிற்பங்கள் எனப் பலவற்றைத் தயாரித்து கண்காட்சிகளில் விற்பனைக்கு வைக்கின்றனர்.

அமைச்சரான பிறகு சமீபத்தில் நான் திண்டுக்கல், சிவகங்கை, கோவை, திருச்சி மாவட்டங்களின் நிகழ்ச்சிகளுக்குச் சென்ற போது, அப்படியான தரமான, கலைநயமிக்க பொருட்கள், காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து வியந்து போனேன். அவற்றின் தரமும் மிகச்சிறப்பாக இருந்தது. அவற்றுக்கான விற்பனை வாய்ப்புகள் அதிகரிப்பதன் மூலம், அந்தப் பெண்களின் பொருளாதாரம் மேம்படும் என்பதை நாம் அறிவோம்.

ஆகவே, என்னைச் சந்திக்க வரும் கழகத்தினர் இனிமேல் மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும் அத்தியாவசியப் பொருட்களை அன்புப்பரிசாக வழங்கலாம். இவற்றை ஆதரவற்ற குழந்தைகள், முதியோர் காப்பகங்களுக்கு வழங்க முடிவு செய்துள்ளோம். புத்தகங்கள், கழக வேட்டி – துண்டுகளை எப்போதும் போல் வழங்கலாம். ஆனால், பட்டு சால்வை, பூங்கொத்து போன்றவற்றை அறவே தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த முடிவால்; வழங்கும் நீங்களும் மகிழ்வீர்கள், உங்கள் மூலம் பலன்பெறுபவர்களும் மகிழ்வார்கள். இவற்றை எண்ணி நானும் மகிழ்ச்சி கொள்வேன். இந்த எளிய வேண்டுகோள் – ஏற்றமிகு மாற்றங்களை ஏற்படுத்தும் என நம்புகிறேன்.

நன்றி, வணக்கம்!

உங்கள்
**உதயநிதி**

## மு.க. ஸ்டாலின்
### தமிழ்நாடு முதலமைச்சர்

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில் வழுவாது நடைபோட்டு வரும் நமது அரசானது ஏழை எளிய, அடித்தட்டு விளிம்புநிலை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய திட்டங்களை ஒவ்வொன்றாக நிறைவேற்றித் தரும் வகையில் செயல்பட்டு வருகிறது. சமூகத்தின் சரிபாதியான மகளிருக்காக சிறப்புத் திட்டங்களை வகுப்பதில் தமிழக அரசு என்றும் முனைப்புடன் செயலாற்றி வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மகளிருக்கு சொத்தில் சம உரிமை, வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு, உள்ளாட்சி மன்றங்களில் இட ஒதுக்கீடு, பொருளாதாரத்தில் மேம்பட மகளிர் சுய உதவிக் குழுக்கள் என மகளிர் நலன் காத்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

மகளிருக்கு இலவசப் பேருந்து பயணம், மாணவியருக்கு உயர்கல்வி கற்க ‘புதுமைப்பெண் திட்டம்’, மக்களைத் தேடி மருத்துவம், காலை உணவுத் திட்டம், இல்லம் தேடி கல்வித் திட்டம், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தள்ளுபடி, வங்கிக் கடன் இணைப்பு, மணிமேகலை விருது போன்றவை வழங்குவது உள்ளிட்ட எண்ணற்ற மகளிர் நலத் திட்டங்கள் நம்முடைய அரசின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள்.

தமிழ்நாட்டின் கடைக்கோடி கிராமத்தில் வசிக்கும் பெண்கள் கூட இன்று பொருளாதாரத் தன்னிறைவு பெற்று, வளமாக வாழ்ந்து வருகின்றனர் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். மகளிர் மேம்பாட்டில் அக்கறை கொண்டுள்ள நமது அரசு 2022–23ஆம் நிதியாண்டில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 25 ஆயிரம் கோடி ரூபாய் கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், இதுவரை 16,845.82 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவிப்பதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். மீதமுள்ள இலக்கை நிறைவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அந்த இலக்கையும் அடைந்து சாதனை படைப்போம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மகளிரின் மகிழ்ச்சி தான் நமது செயலாக்கத்திற்கான உண்மையான அளவுகோல்! மகளிர் மகிழ்ச்சி அடைந்தால் – அவர்களது மனது நிறைந்தால் போதும் நாம் சரியான பாதையில் பயணிக்கிறோம் என்பதற்கு அதுவே நற்சான்று என்று கருதுகிறேன், உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மு.க. ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

நாள் : 10.01.2023



சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
**ஆதரவை
தாருங்கள்!**







முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/– |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/– |
| மூன்று ஆண்டு | ரூ. 680/– |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2–வது பக்கம் | ரூ. 50,000/– |
| அட்டையின் 3–வது பக்கம் | ரூ. 50,000/– |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/– |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/– |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

**விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**
அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.



# சுவையான தக்காளி பூண்டு சாதம்

**தேவையான பொருட்கள்:**

அரிசி – 2 கப், வெங்காயம் – 2 (நறுக்கியது), தக்காளி – 2 (நறுக்கியது), பச்சை மிளகாய் – 3 (நறுக்கியது), பூண்டு பேஸ்ட் – 4 டேபிள் ஸ்பூன், இலவங்கம் – 1, கிராம்பு – 2, மிளகாய் தூள் – 1 டீஸ்பூன், கரம் மசாலா தூள் – 1 டீஸ்பூன், சீரகம் – 1 டீஸ்பூன், பிரியாணி இலை – 1, வர மிளகாய் – 2, உப்பு – தேவையான அளவு, எண்ணெய் – தேவையான அளவு, கொத்தமல்லி – சிறிது

**செய்முறை :**

முதலில் அரிசியை நன்கு கழுவி, குக்கரில் போட்டு தண்ணீர் ஊற்றி, 2–3 விசில் விட்டு இறக்கவும். பின் அதனை இறக்கி, ஒரு குளிர வைக்க வேண்டும்.பின்னர் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி, காய்ந்ததும் சீரகம், இலவங்கம், வர மிளகாய், கிராம்பு, பிரியாணி இலை சேர்த்து தாளிக்கவும்.பிறகு அதில் நறுக்கி வைத்துள்ள வெங்காயம் சேர்த்து நன்கு வதக்கவும்.

பின் அதில் பூண்டு பேஸ்ட், தக்காளி, பச்சை மிளகாய் மற்றும் உப்பு சேர்த்து, 2 நிமிடம்தீயைகுறைவில்வைத்துவதக்கவும். நன்கு வதங்கியதும், அதில் மிளகாய் தூள் கரம் மசாலா தூள் சேர்த்து நன்கு கிளறவும். பின் அதில் வேக வைத்துள்ள சாதத்தைப் போட்டு மசாலா நன்கு சாதத்தில் ஒன்றாகும் வரை கிளறி, பின்னர் இறக்கவும். இப்போது சுவையானகாரமானதக்காளிபூண்டுசாதம் ரெடி.இதன் மேல் கொத்தமல்லியைத் தூவி பரிமாறலாம். அதுவும் இதனை ஏதேனும் மசாலா கிரேவியுடன் தொட்டு சாப்பிட்டால் மிகவும் அருமையாக இருக்கும்.

அன்றாட வாழ்வில் நாம் சிலபல விஷயங்களை தெரிந்தோ தெரியாமலோ செய்து வருகிறோம். அப்படி நாம் மேற்கொள்ளும் விஷயங்களில் சில நன்மையாகவும், சில தீங்கு விளைவிப்பவையாகவும் இருக்கலாம். ஆனால் பலருக்கும் தீங்கு விளைவிக்கும் செயல்கள் என்னவென்று தெரிவதில்லை. அப்படி தெரியாமலேயே அன்றாடம் அவற்றை பின்பற்றி வந்து, பல்வேறு ஆரோக்கிய பிரச்சனைகளை சந்திக்கின்றனர்.

**உடல் நலக் குறிப்புகள்**

- மாத்திரைகளை சாப்பிடும் போது குளிர்ச்சியான நீரில் எடுப்பதை தவிர்த்து, வெதுவெதுப்பான நீரில் எடுக்க வேண்டும்
- எப்போதும் 5 மணிக்கு மேல் வயிறு நிறைய உணவை உட்கொள்ளும் பழக்கத்தை கைவிட வேண்டும்.
- பகல் நேரத்தில் குடிக்கும் தண்ணீரின் அளவை அதிகரித்து, இரவில் நேரத்தில் குறைத்துக் கொள்ள வேண்டும்.
- தினமும் இரவில் 10 மணிக்கு தூங்கி, அதிகாலையில் 4 மணிக்கு எழும் பழக்கத்தைக் கொண்டால், உடல் ஆரோக்கியமாக இருக்கும்.
- எப்போதும் உணவை உண்ட பின் தூங்கும் பழக்கத்தை கொண்டவராயின், அவற்றை உடனே தவிர்ப்பது நல்லது.
- போன் பேசும் போது இடது பக்கம் வைத்து பேசுவது நல்லது.
- மொபைலை சார்ஜ் போட்டுக் கொண்டே பேசுவதை தவிர்க்க வேண்டும். அதிலும் பேட்டரி மிகவும் குறைவாக இருக்கும் நேரத்தில் சார்ஜ் போட்டிருந்தால், அப்போது எந்த ஒரு அழைப்பு வந்தாலும் பேச வேண்டாம். ஏனெனில் சாதாரண நேரத்தை விட, சார்ஜ் போட்டிருக்கும் நேரத்தில் கதிர்வீச்சு 1000 மடங்கு அதிகமாக இருக்கும்.

## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

# வெற்றிக் கதைகள்

வெற்றி





### சிப்காட் வளாகத்தில் சுய உதவிக் குழுவின் தொழிற்சாலை

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியத்தில் உள்ள சிப்காட் தொழிற்சாலையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் வட்டார அளவிலான கூட்டமைப்பின் மூலம் ரூ.2,85,000/– மதிப்பில் 80 சென்ட் நிலம் 99 வருட குத்தகைக்கு பெறப்பட்டுள்ளது. இந்த வளாகத்தில் முத்தனேந்தல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள தனம் மகளிர் சுய உதவிக்குழு ரூ.20 லட்சம் தொழில் மதிப்பீட்டில் கடல் பாசியை உலர்த்தி அரைத்து வழங்குவதற்கான தொழிற்சாலையை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது.

இந்தத் தொழிற்சாலைக்கு திருப்பாசேத்தி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கடனாக ரூ.11.76 இலட்சம், மாவட்ட தொழில் மையத்தின் மூலம் மானியமாக ரூ.7.14 இலட்சம் மற்றும் குழு உறுப்பினர்களின் பங்குத் தொகையாக ரூ.1.10 இலட்சம் என முதலீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் உலர்களம் அமைப்பதற்கு சமுதாய முதலீட்டு நிதியிலிருந்து ரூ.3.25 இலட்சம் பெற்றுள்ளனர்.இந்தத் தொழிற்சாலையில் குழுவில் உள்ள உறுப்பினர்களே பணிபுரிந்து வருகின்றனர்.

சிப்காட் வளாகத்தில் உள்ள 'அக்வா அக்ரி என்ற நிறுவனத்துடன் 7 ஆண்டு மூலப் பொருட்கள் மற்றும் விற்பனை செய்வதற்கான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.மொத்தம் 12 நபர்கள் சிப்ட் முறையில் பணிபுரிந்து வருகின்றனர்.ஒரு நபருக்கு வங்கிக் கடன் திருப்பம் போக நாள் ஒன்றுக்கு ரூ.240/– வீதம் வருமானம் கிடைக்கின்றது. தினசரி வேலை வாய்ப்பும் பெற்று பயனடைந்து வருகின்றனர். நாளது தேதி வரை ரூ.3.64 இலட்சம் வங்கிக் கடன் திரும்ப செலுத்தியுள்ளனர். கடன் திருப்பம் முடிந்தவுடன் தினசரி வருமானம் ரூ.400/– முதல் ரூ.500/– வரை ஒவ்வொரு உறுப்பினரும் பெறலாம். சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தங்களாலும் தொழிற்பேட்டையில் தொழிற்சாலை தொடங்க முடியும் என்றும், உறுப்பினர்களே தொழிற்சாலையின் உரிமையாளராகவும் இருப்பதில் பெருமிதம் கொள்கின்றனர்.

## வட்டார வணிக வள மைய நிதியினால் கிடைத்த வெற்றி



எனது பெயர் புவனா, நான் கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் வட்டாரம், மத்துவராயபுரம் ஊராட்சியில் மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மத்துவராயபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கீழ் பூ மகள் மகளிர் சுய உதவிக் குழுவில் 8 ஆண்டுகளாக உறுப்பினராக இருக்கிறேன். நானும் எனது கணவரும் சேர்ந்து அச்சுக் கூடம் *(Printing Press)* நடத்தி வருகிறோம்.

கொரோனா காலங்களில் எந்தவித அச்சுப்பணிகளும் கிடைக்கப் பெறாமல் எங்களது வாழ்வாதாரம் பின்தங்கிய நிலையில் இருந்தது. மேலும் தற்பொழுது கிடைக்கும் வேலைகளுக்கும் அச்சிட தேவையான பொருட்களை வாங்க போதுமான அளவு எங்களிடம் பண வசதி இல்லை. எனவே எங்களது மத்துவராயபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் தனி நபர் கடன் கோரி கடன் விண்ணப்பம் வழங்கினோம்.



மகளிர் திட்டம் ஒப்புதலுடன் தொண்டாமுத்தூர் வட்டார வணிக வள மையம் மூலம் எனக்கு ரூ.50,000/– கடன் வழங்கப்பட்டது. அந்தத் தொகையை தொழிலில் முதலீடு செய்து கிடைத்த வேலைகளை சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கி வருகிறேன். இதனால் எங்களுக்கு கணிசமான அளவு வருமானம் கிடைக்கிறது. வாங்கிய கடன்களையும் நல்ல முறையில் திரும்பச் செலுத்தி வருவதுடன், எங்களுக்கும் செலவுகள் போக ரூ.9,000/– வரை மாத வருமானம் கிடைக்கிறது. எனது தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த மகளிர் திட்டத்திற்கு எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

## நிதி ஆதாரமும் வாழ்வின் முன்னேற்றமும்



எனது பெயர் சபிரா பானு. நான் திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டாரம், கரடிக்கூட்டம் ஊராட்சியில் உள்ள அக்கம்மநாயக்கன் புதூர் எனும் குக்கிராமத்தில் வசித்து வருகின்றேன். எங்கள் கிராமத்தில் இஸ்லாமிய பெண்கள் இதுவரை சுயமாக எந்தவொரு தொழிலிலும் ஈடுபட்டது கிடையாது. இருப்பினும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஸ்ரீவேலன் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினரானதால் எனக்கு என்னை அடையாளப்படுத்திக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பு ஏற்பட்டது என்பதை பெருமையாக செல்லிக் கொள்கின்றேன். நான் இக்குழுவில் இணைவதற்கு முன் சாதாரண குடும்ப பெண், எனக்குள் இருக்கும் திறமையை பயன்படுத்தி சுயமாக தொழில் தொடங்கி சுயமாக வருமானம் ஈட்டும் அளவிற்கு சுய உதவிக் குழுவின் மூலம் எனக்கு தெளிவுபடுத்தினார்கள்.

அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள சமுதாய முதலீட்டு நிதியாக ரூ.50,000/–த்தினை கடந்த 2021–ம் ஆண்டு தொழிற்கடனாக பெற்று ஸ்ரீ வேலன் எனும் பெயரில் உணவு பதப்படுத்தும் மற்றும் உற்பத்தி தொழிலை ஆரம்பித்தேன். ஆரம்ப கட்டத்தில் தேன் மிட்டாய், பன், பேக்கரி பொருட்கள், இனிப்பு மற்றும் கார வகைகள் தயாரித்து பழனி வட்டாரம் முழுவதும் உள்ள கடைகளுக்கு நேரடியாக மொத்தம் மற்றும் சில்லறை விற்பனையை எனது கணவரின் துணையுடன் செய்து வருகின்றேன்.



மேலும், உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதலை அதிகப்படுத்துவதற்காக இத்திட்டத்தின் வழியே PMFME மானிய திட்டத்திற்காக NRLM இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு MOFPI மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு விதை மானியம் ரூ.40,000/– வழங்கப்பட்டு தொழில் மேம்பாட்டிற்காகன நுட்பங்களை பேக்கிங் மற்றும் லேபிலிங் செய்து சந்தைப்படுத்துதலை அதிகப்படுத்தி கூடுதல் விற்பனையையும் இலாபத்தையும் பெறுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. தற்போது என்னுடைய தொழில் நிறுவனத்தில் எங்களது சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த நான்கு நபர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி அந்நிறுவனத்திற்கு செயல் இயக்குநராக இருப்பதில் பெருமிதம் கொள்கிறேன். எனது வாழ்வின் பொருளாதார ரீதியான உயர்வு மற்றுமின்றி சமூக ரீதியிலான அங்கீகாரத்தினையும் பெற்றுத் தந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.





## இளைஞர் திறன் வளர்ப்புப் பயிற்சியினால் கிடைத்த வெற்றி

எனது பெயர் வனிதா, நான் கோயம்புத்தூர் மாவட்டம், பெரிய நாயக்கன்பாளையம் வட்டாரம், நாயக்கன்பாளையம் ஊராட்சி, பாலமலை பகுதியில் உள்ள மாங்குழி மலைவாழ் குக்கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் 10ஆம் வகுப்பு வரை எங்கள் ஊருக்கு அருகில் உள்ள அரசு உண்டு உறைவிடப் பள்ளியிலும், 12ஆம் வகுப்பு நாயக்கன்பாளையம் அரசுப் பள்ளியிலும் படித்து விட்டு, இரண்டு வருடம் பஞ்சு மில்லில் வேலை செய்து வந்தேன். பஞ்சு மில்லில் இருந்து வரும் தூசியினால் எனது உடல் நிலை அடிக்கடி பாதிக்கப்பட்டது. ஆனாலும் குடும்ப சூழ்நிலை காரணமாக நான் வேலைக்கு செல்ல வேண்டிய அவசியம் இருந்தது.

எனது தாயார் எங்கள் பகுதியில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளார். மகளிர் திட்டத்தின் வட்டார மேலாளர் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர் தீனதயாள் உபாத்யாய கிராமின் கௌசல் யோஜனா குறித்தும், இளைஞர் திறன் வளர்ப்புப் பயிற்சி பற்றி எங்கள் பகுதியில் நடைபெற்ற குழுக் கூட்டத்தின் போது கூறினார்கள். அதைத் தொடர்ந்து செவிலியர் உதவியாளர் பயிற்சிக்கு எங்கள் மலைப் பகுதியிலிருந்து ஆறு பெண்கள் சென்றோம்.அப்பயிற்சியில் தங்குமிடம், உணவு, சீருடை, மற்றும் நோட்டுப் புத்தகம் எவ்வித கட்டணமும் செலுத்தாமல் கொடுக்கப்பட்டது. செவிலியர் உதவியாளர் பயிற்சி மட்டுமின்றி ஆங்கிலம் பேசுவதற்கும், தனித்திறமையை வெளிப்படுத்துவதற்கும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்வது பற்றியும் நல்ல முறையில் கற்றுக் கொடுக்கப்பட்டது.

பயிற்சியின் போது வேலைக்கு உண்டான பயிற்சியும் (On Job Training) பயிற்சிக்குப் பின்னர் அந்நிறுவனம் மூலம் வேலை வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுத்தனர். தற்போது கோவை, இராமநாதபுரம் பகுதியில் உள்ள *Pappa Mamma Senior Care Centre*– ல் நாங்கள் ஆறு நபர்களும் மாதம் ரூ.14,000/– ஊதியத்திற்கு பணிபுரிந்து வருகின்றோம்.

தீனதயாள் உபாத்யாய கிராமின் கௌசல் யோஜனா பயிற்சியின் மூலம் கிடைத்த வேலை வாய்ப்பிற்கு பின்னர் எங்கள் குடும்பத்தின் பொருளாதார நிலையும், எனது உடல் நிலையும் நன்றாக உள்ளது. மகளிர் திட்டம், தீனதயாள் உபாத்யாய கிராமின் கௌசல் யோஜனா, பயிற்சி அளித்த நிறுவனம் ஆகியவற்றிற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பாக்கு மட்டை தயாரித்தல் தொழிலில் ஈடுபட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழு




நாமக்கல்மாவட்டம்,திருச்செங்கோடுவட்டாரம்,சித்தாளந்தூர்ஊராட்சி,சித்தாளந்தூர்குக்கிராமத்தில் செயல்பட்டு வரும் சித்தாளந்தூர் 1 மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்கள் குழுவினைப் பற்றி கூறும்போது, எங்கள் பகுதியில் வசித்துவரும் பெண்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழு அமைப்பது பற்றி விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது. தொடர்ந்து இப்பகுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 13 பெண்களைக் கொண்டு சித்தாளந்தூர் 1 மகளிர் சுய உதவிக் குழு துவக்கப்பட்டு, மூன்று மாதங்களுக்கு பிறகு உறுப்பினர்களுக்கு அடிப்படை பயிற்சிகள் வழங்கப்பட்டது.

குழுவில் இணைவதற்கு முன்னர் வங்கி மற்றும் வெளியிடங்களுக்கு செல்வதற்கு பயந்தோம், தற்போது அனைவரும் வங்கி மற்றும் பிற இடங்களுக்கு தனியாகவே சென்று வரும் அளவிற்கு முன்னேறியுள்ளோம், எங்கள் குழுவிற்கு பொருளாதார கடனாக கனரா வங்கி, சித்தாளந்தூர் கிளையில் ரூ.4.00 இலட்சம் பெற்று, பாக்கு மட்டை தட்டு தயாரிக்கும் இயந்திரம் வாங்கி பாக்கு மட்டை தட்டுகளை உற்பத்தி செய்யத் தொடங்கினோம்.



ஆரம்பத்தில் உள்ளூர் கடைகள், கோவில் திருவிழாக்களுக்கு பாக்கு மட்டைத் தட்டுகளை விற்பனை செய்தோம். உற்பத்தி செய்த தட்டுகள் அனைத்தும் விற்பனை ஆகாமல் தேக்கமடைந்தது. பிறகு எங்கள் பகுதிக்கு அருகில் உள்ள கிறிஸ்டி மில் மேலாளரிடம் எங்கள் தயாரிப்புகள் குறித்து பேசினோம். தற்போது நாங்கள் உற்பத்தி செய்யும் அனைத்து தட்டுகளையும் கிறிஸ்டி மில் நிர்வாகத்தினர் வாங்கி கொள்கின்றனர்.

பாக்கு மட்டைத் தட்டு உற்பத்தியில் செலவினம் போக மாதம் ரூ.30,000/– வரை வருமானம் கிடைக்கிறது. இந்தத் தொகையை எங்கள் பிள்ளைகளின் கல்வி செலவு மற்றும் குடும்ப செலவினங்களுக்கு பயன்படுத்துகிறோம். இதனால் எங்களுக்கு குடும்பத்தில் மரியாதை கிடைக்கிறது. எங்களுடைய வளர்ச்சிக்கும் வாழ்வாதாரத்திற்கும் உறுதுணையாக இருந்த தமிழ்நாடுமாநிலஊரகவாழ்வாதாரஇயக்கத்திற்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்" என்று சித்தாளந்தூர் 1 மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்துக் கொள்கின்றனர்.




# சட்டம்

## ஆபத்து காலங்களில் காக்கும் அவசர உதவி எண்கள்

திடீர் ஆபத்துக்கள் வரும் போது பெண்கள் 1091 என்கிற தமிழக அரசின் பெண்கள் அவசர உதவி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம். எங்கோ ஓர் இடத்தில் தனித்து விடப்பட்டு விட்டாலும் அல்லது தங்க இடமில்லாத போதும் இந்த நம்பருக்கு தொடர்பு கொள்ளலாம். இந்த எண் எடுக்கப்படவில்லை என்றால் 044-2345 2365 என்கிற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்.பெண் குழந்தைகள் என்றால் 1098 என்கிற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்.பெற்ற பிள்ளைகளால் கைவிடப்பட்டு ஆதரவற்ற நிலையில் இருக்கும் வயதான பெண்கள் என்றால் 1253-ஐ தொடர்பு கொள்ளலாம்.

குடும்பத்தில் கணவன் மூலம் வன்கொடுமைக்கு ஆளானாலோ அல்லது வேலை செய்யுமிடத்திலோ, கல்லூரியிலோ பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டாலோ 044-2855 1155 என்கிற தமிழ்நாடு மகளிர் ஆணையத்தின் எண்ணுக்கும், 044-2526 4568 என்ற எண்ணுக்கும் அழைத்து ஆலோசனைகள் பெற்றுக் கொள்வதோடு புகாரும் கொடுத்து உங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்குத் தீர்வும் காணலாம்.

மன ரீதியாக பாதிக்கப்பட்ட பெண்களை, ஆதரவற்ற பெண்களைப் பாதுகாக்க 044-2653 0504, 044-2653 0599 என்கிற எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.இது சென்னை முகப்பேரிலுள்ள பெண்களுக்கான விழுதுகள் தொண்டு நிறுவனத்தின் எண். மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

வாடகைத் தாய்களாகப் போய் புரோக்கர்களிடம் ஏமாறும் பெண்கள் 044-2618 4392, 91713 13424 என்கிற உலக வாடகைத் தாய்களின் உரிமைகள் அமைப்பு எண்ணைத் தொடர்பு கொண்டு வாடகைத் தாய் என்றால் என்ன? அவர்களுக்கான உரிமைகள், விதிமுறைகள் என்ன என்பனவற்றை அறியலாம்.

ரயில் பயணங்களின் போது பெண்களுக்கு ஆபத்து ஏற்பட்டால் புகார் தெரிவிக்க ரயில்வே போலீஸ் நம்பரான 044-2535 3999, 90031 61710, 99625 00500 எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

சென்னைக் கல்லூரிகளில் ராக்கிங் என்றால் 95000 99100 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்.கொடுத்தால் போதும், உடனடியாக காவல்துறை நடவடிக்கை எடுக்கும்.

ஆட்டோவில் அளவுக்கதிகமான குழந்தைகளை ஏற்றிச் சென்றால் 044-2474 9002 மற்றும் 044-2674 4445 என்கிற எண்களைத் தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம்.

பொருட்கள் வாங்கும் கடைகளில் ஏமாற்றப்படுகிறீர்கள் என்று உணர்ந்தால் மாநில நுகர்வோர் புகார்களுக்கான டோல் ஃப்ரீ எண் 1800 11400, 94454 64748, 72999 98002, 72000 18001, 044-2859 2828 ஆகிய எண்களைத் தொடர்பு கொண்டு புகார் கொடுப்பதோடு ஆலோசனைகளையும் பெறலாம்.

பேருந்துகள் சரியான நேரத்திற்கு வராதது, நடத்துநர் மீதி சில்லரையைக் கொடுக்காதது அல்லது குடித்துவிட்டோ, செல்போன் பேசிக் கொண்டோ ஓட்டுநர் பேருந்தை ஓட்டுவது போன்ற புகார்களுக்கு 93833 37639 என்கிற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பலாம்.

ஆதாரம்: தமிழக அரசு – செய்தி துறை

# தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

# வெற்றிக் கதைகள்

வெற்றி




## வளமான வாழ்க்கை தந்த வாழ்வாதார இயக்கம்

நாகப்பட்டினம் மாவட்டம், தெற்கு பால்பண்ணைச்சேரி, வார்டு எண். 13–ல் வசிக்கும் எனது பெயர் லூர்து மேரி, (க/பெ. ராபர்ட்). நான் எங்கள் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் மரியாள் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். எனக்கு 2 குழந்தைகள் உள்ளனர். வெளிநாட்டில் வேலை செய்து வந்த எனது கணவர் சொந்த ஊருக்கு வந்திருந்த நிலையில், 2019 ஆம் ஆண்டு கொரோனா பரவலின் காரணமாக மீண்டும் வெளிநாட்டிற்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் வருவாய் இல்லாத நிலையில் அன்றாடம் குடும்பம் நடத்துவதே சிரமமாக இருந்துவந்தது. இச்சூழ்நிலையில் சானிட்டரி நாப்கின் தயாரிப்பது தொடர்பாக சொக்கநாதர் கோவில் பகுதி அளவிலான கூட்டமைப்பில் விபரம் கேட்டபோது தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் செயல்படுத்தப்படும் தனிநபர் சுய வேலைவாய்ப்பு திட்டம் (SEP-I) குறித்து எனக்கு தெரியப்படுத்தினர். அதனைத் தொடர்ந்து வங்கியின் மூலம் ரூ. 2,00,000/– கடன் பெற்று பெண்மை என்ற பெயரில் சானிட்டரி நாப்கின் தயாரிக்கும் தொழிலினை சிறிய அளவில் தொடங்கினேன்.

தற்போது நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதி அளவிலான கூட்டமைப்பு மூலமாகவும், சிறிய கடைகளிலும் எனது தயாரிப்பான பெண்மை சானிட்டரி நாப்கின் விற்பனையாகிறது. எனக்கு மாத வருமானமாக ரூ.24,000/– வரை கிடைக்கின்றது. இதன் மூலம் எனது குழந்தைகளை படிக்கவைக்கின்றேன். எனது குடும்பத்திற்கு சமுதாயத்தில் புதிய வாழ்க்கையை தந்த மகளிர் திட்டத்திற்கும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கும் மற்றும் சொக்கநாதர் கோவில் பகுதி அளிவலான கூட்டமைப்பிற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு மற்றும் பணியமர்வு பயிற்சி




எனது பெயர் கோ.பிரேமா, நான் கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், பெரியகண்டியாங்குப்பம் கிராமத்தின் கிழக்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்து வேலைவாய்ப்பு இல்லாமல் வீட்டில் இருந்தேன். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் பணிபுரியும் சமுதாய அமைப்பாளர்கள் வாயிலாக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி அளிப்பது பற்றி தகவல் அறிந்து விருத்தாசலத்தில் நடைபெறும் Manual Metal Arc Welding / Shielded Metal Arc Welding welder பயிற்சியில் சேர்ந்து பயிற்சி பெற்று வருகிறேன்.

ஆண்கள் மட்டுமே வெல்டிங் செய்யும் பணியினை செய்து வருகின்றனர். மேலும் பெண்களாலும் இப்பணியினை செய்ய முடியும் என்ற நோக்கத்திற்காக நான் இப்பயிற்சியை விரும்பி தேர்வு செய்து பயிற்சி பெற்று வருகிறேன். பயிற்சி முடித்தபின்பு இப்பணியினை மேற்கொண்டு இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை கொண்டு எனது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வேன்.



பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை ஊட்டும் வகையில் எனக்கு வெல்டிங் பயிற்சி பெறகிடைத்த வாய்ப்பை முழுமையாக பயன்படுத்தி பயன் பெறுவேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வாய்ப்பளித்த நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

## நகர்ப்புர வாழ்வாதார மையம் - நெல்லை கிராப்ட்ஸ்



திருநெல்வேலி மாவட்ட மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் நலிவுற்ற கைவினை கலைஞர்களால் உற்பத்தி செய்யப்படும் தனித்தன்மை வாய்ந்த பல்வேறு வகையான கைவினைப் பொருட்களை விற்பனை செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை நிலைப்படுத்த 25.02.2021 அன்று நெல்லை கிராப்ட்ஸ் என்ற பெயரில் நவீன வடிவமைப்புடன் துவங்கப்பட்ட பிரத்யேக விற்பனையகத்தின் கிளை பாளையங்கோட்டை மேற்கு கோட்டைவாசலில் அமைந்துள்ள மேடை காவல் நிலையம் அருகில் நெல்லை பொருநை இலக்கிய பெருவிழாவின் இரண்டாம் நாளான 26.11.2022 அன்று துவங்கப்பட்டது. இந்த விற்பனையகம் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் புதிதாக உருவாக்கப்பட்ட திருநெல்வேலி நகர்ப்புர வாழ்வாதார மையத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இங்குள்ள பொருட்கள் பற்றிய விபரங்கள் உள்ளூர் மற்றும் வெளியூர், பிற மாநில மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் அறிந்து கொள்ளவும், சந்தைப்படுத்துதலை மேம்படுத்தவும், www.nellaicrafts.in என்ற இணையதள முகவரி Amazon, Instagram, Twitter, Youtube channel மற்றும் Facebook ஆகிய சமூக ஊடகங்களில் இவ்விற்பனையகம் பற்றிய விபரங்களை பதிவு செய்து அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு வருகிறது.



இந்த விற்பனை மையத்தில் திருநெல்வேலி மாவட்டத்தின் தனித்துவமிக்க பொருட்களான பத்தமடைபாய் பொருட்கள், இராதாபுரம் பனைஓலை பொருட்கள், அம்பாசமுத்திரம் மரப்பொம்மைகள், வாகைக்குளம் குத்துவிளக்கு, காருக்குறிச்சி மண்பாண்டங்கள், களக்காடு வாழைநார் மற்றும் கற்றாழை நார் பொருட்கள் ஆகியவை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இவ்விற்பனையகத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத்தலைவர் திரு.மு. அப்பாவு அவர்களும், தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. கனிமொழி கருணாநிதி அவர்களும் வருகைதந்து பார்வையிட்டனர். இந்தநிகழ்வின்போது திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே.விஷ்ணு, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு ஊரக / நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி.ஜெ.வே. சாந்தி ஆகியோர் உடனிருந்தனர்.





## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி...

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி எமனேஸ்வரம் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செம்பருத்தி மகளிர் சுய உதவிக்குழு மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இக்குழுவின் உறுப்பினர்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கு துவங்கி, மாதந்தோறும் சேமித்து வருகின்றனர். தொடர்ந்து மூன்று மாதம் செயல்பட்ட பின்னர் சிறு தொழில் செய்ய விருப்பமுள்ளவர்களுக்கு உள்கடன் கொடுத்து வந்தனர். அதிக வட்டிக்கு வெளியாட்களிடம் கடன் வாங்காமல் மகளிர் குழுவின் மூலம் கடன் பெற்று தொழில் செய்து வருமானத்தை ஈட்டி சொந்த காலில் நிற்பது தான் இக்குழு உறுப்பினர்களின் நோக்கம்.

இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் நெசவு தொழில் செய்பவர்கள். எனவே இக்குழுவில் உள்ள 12 உறுப்பினர்களும் குழுவில் கடன் பெற்று நெசவு தொழில்செய்து மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருகின்றனர். இந்தத் தொகையைக் கொண்டு குழுவின்உறுப்பினர்கள் தங்கள் குடும்பத்தின் பொருளாதார தேவையினை ஈடு செய்து வருவதால் அவர்களுக்கென தனி கௌரவமும், பாராட்டும் கிடைக்கிறது. தங்களுக்கு நல்ல பெயரை பெற்றுத் தந்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு செம்பருத்தி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## தூய்மை பணியில் ஈடுபடும் சிறப்பு சுய உதவிக்குழுக்கள்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் நகராட்சியில் தூய்மை பணியில் ஈடுபடும் துப்புரவு பணியாளர்களை ஒருங்கிணைத்து, கயா, நிலா, அன்னைதெரேசா போன்ற பெயரில் சிறப்பு குழுக்களாக உருவாக்கப்பட்டு, நகராட்சியில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுவுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுக்களில் ஏற்கப்படும் முடிவுகள் முறையாக தீர்மான புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. இந்தக் குழுக்களுக்கு ஊக்குனர், பிரதிநிதி மற்றும் குழுஉறுப்பினர்களுக்கான பயிற்சி தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மூலம் வாங்கப்பட்டுள்ளது. மூன்று மாதம் நிறைவடைந்த பின்னர் இந்தக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ10,000/- வழங்கப்பட்டுள்ளது. இக்குழு உறுப்பினர்களின் சேமிப்பு தொகையுடன் சுழல் நிதி ரூ10,000/- இணைத்து தேவையானவர்களுக்கு உள்கடனாக முன்னுரிமையின் பேரில் உள்கடன் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தச் சிறப்புக் குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து துறையூர் நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலும் தூய்மைபணிகளை மேற்கொண்டு, வீடு தோறும் மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை பிரித்து வாங்கி, பிரித்து எடுத்த கழிவுகளைக் கொண்டு இயற்கை உரம் தயாரிக்கும் பணிகளையும், கழிவுநீர் பாதைகளை சுத்தப்படுத்தும் பணிகளையும் சிறப்பாக செய்து, துறையூர் நகராட்சி முழுவதும் தூய்மை பணியை சிறப்பான முறையில் செய்து வருகின்றனர்.

மேலும் இந்த சிறப்புக் குழுக்களின் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கத் திறன் மேம்பாட்டு பயிற்சியும், பயிற்சியுடன் வேலையும், தெருவோர வியாபாரிகளுக்கு வங்கிக் கடனும் பெற்று வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகின்றனர்.







## தமிழ்நாடு வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

# வெற்றிக் கதைகள்

**கோழிப்பண்ணையில் லாபம் ஈட்டுகிறோம்!**
**பெரிய அளவில் நிர்வாகம் செய்கிறோம்!**

வெற்றி



பெயர் : ரதிதேவி
நிறுவனம் : காவிரி தொழிற்குழு
கிராமம் : பாப்பம்பாளையம்
வட்டாரம் : திருச்செங்கோடு
மாவட்டம் : நாமக்கல்

### மகளிர் பின்னணி

எங்கள் ஊரில் நாங்கள் வீடுகளில் நாட்டுக்கோழிகளை வளர்த்து வந்தோம். எங்களின் பிள்ளைகளை பார்த்துக்கொள்ளவும், வீட்டிலேயே கோழி வளர்ப்பதற்கும் எங்களுக்கு வசதியாக இருந்தது. ஆனால் வீட்டில் கோழி வளர்த்ததில் பெரிதாக லாபம் ஒன்றும் வரவில்லை, எங்களின் பொழுதுபோக்காக இருந்து வந்தது, எங்கள் வீட்டு வேலைகளுடன் இதையும் ஒன்றாக செய்து வந்தோம்.

### திட்டத்தின் விழிப்புணர்வு

கடந்த ஆண்டு எங்கள் ஊரில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் ஒரு ஒருங்கிணைப்புக் கூட்டம் நடந்தது, அதில் மகளிர் குழுவினர் அனைவரும் கலந்துகொண்டோம். அந்த ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தொழிற்குழு குறித்தும், அதன் பயன்கள் குறித்தும் திட்டத்தினர் விளக்கம் அளித்தனர்.

### தொழிற்குழு தொடக்கம் & தொடக்க நிதி

எங்களுக்கு கோழி வளர்ப்பில் ஏற்கனவே அனுபவம் உள்ளதால், திட்ட வழிகாட்டுதலின்படி கோழி வளர்க்க தொழிற்குழுவாக உருவாக்கப்பட்டோம். கோழி வளர்ப்பிற்குத் தேவையானவற்றை குழுவில் கலந்தாலோசித்து, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு முன்மொழிவை அளித்தோம். அதன் அடிப்படையில் எங்கள் தொழிற்குழுவிற்கு ரூ. 75,000 தொடக்க நிதியை அளித்தனர். அந்த நிதியில் கம்பி வேலி, ஷெட் அமைத்து கோழிக்குஞ்சுகளை வாங்கி பெரிய கோழிப் பண்ணையாக தொழில் விரிவாக்கம் செய்துள்ளோம்.

### கோழி வளர்ப்பும், விற்பனையும்

ஒரு கோழிக்குஞ்சை ரூ. 80–100 என்ற விலையில் வாங்கி, அவற்றை 21 நாட்கள் கரன்ட்டில் வைத்திருந்து, சொட்டு மருந்து கொடுத்து ஷெட்டுக்கு கொண்டு வந்துவிடுவோம். அவற்றை 2 மாதங்கள் வளர்த்து, வளர்ந்த கோழியை உயிர் எடையாக ரூ. 400–450 க்கு விற்பனை செய்து வருகிறோம். ஒரு பேட்ச்சிற்கு 150 கோழிக்குஞ்சுகள் வாங்கி அவற்றை 3 மாதங்கள் வளர்த்து விற்பனை செய்கின்றோம். அதில் எங்களுக்கு மாதம் 20,000 ரூபாய் வருமானம் கிடைக்கின்றது. இதுபோன்று ஆண்டுக்கு 3 தொகுப்புகள் (பேட்ச்சுக்கள்) வாங்கி வளர்த்து விற்று வருகிறோம். தற்பொழுது குடும்பத்தையும் கவனித்துக்கொண்டு, கோழிப்பண்ணையையும் மேம்படுத்தி வருகிறோம். எங்கள் ஊரிலேயே எங்களுக்கு வேலை அமைந்தது மிகவும் ஆதரவாக உள்ளது.

### மாற்றம் & முன்னேற்றம்

கோழி வளர்ப்பில் பெரிதாக வருமானம் ஈட்ட தெரியாமல் இருந்தோம். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் பெரிய பண்ணையில் கோழி வளர்க்க கற்றுக்கொண்டோம், தொடக்க நிதி ரூ. 75,000 பெற்றுள்ளோம், தரமான முறையில் நாட்டுக்கோழிகளை வளர்த்து வருகின்றோம். நிலையான வருமானத்தில் பெரிய கோழிப் பண்ணையை நிர்வாகம் செய்து வருகின்றோம்.

## சமுதாயத் திறன் பள்ளியில் பயின்றோம்!
## சமுதாயப் பண்ணைப் பள்ளிக்கு படைக்கின்றோம்!

–இடுபொருள் உற்பத்தியில்
மலரும் பூமி தொழிற்குழு

பெயர் : நந்தினி
நிறுவனம் : மலரும் பூமி தொழிற்குழு
கிராமம் : பட்லூர்
வட்டாரம் : திருச்செங்கோடு
மாவட்டம் : நாமக்கல்



### மகளிரின் பின்னணி

என் பெயர் நந்தினி, நான் தங்கரதம் மகளிர் குழுவில் 4 ஆண்டுகளாக உறுப்பினராக உள்ளேன். எங்கள் ஊரிலுள்ள மகளிர் ஆளுக்கொரு சிறுசிறு வேலைகளை செய்து வந்தோம். எங்கள் குழுவை வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தினர் கண்டறிந்து, எங்களுக்கான தொழிற் பயிற்சி வழங்குவதாக அறிவித்தனர்.

### தொழிற்குழு தொடக்கம்

அதன் அடிப்படையில் சமுதாயத் திறன் பள்ளியில் எங்களுக்கு இயற்கை இடுபொருள் தயாரிக்கும் பயிற்சியை வழங்கினர். இப்பயிற்சியில் எங்கள் ஊரிலிருந்து 20 பேர் கலந்துகொண்டு, இடுபொருட்கள் தயாரிக்க கற்றுக்கொண்டோம். பயிற்சி எடுத்துக்கொண்டவர்களில் 15 மகளிர் இணைந்து தொழிற்குழுவை உருவாக்க திட்டமிட்டோம். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் 'மலரும் பூமி தொழிற்குழுவைத் தொடங்கினோம்'.

### வங்கிக் கணக்குத் தொடக்கம்

நாங்கள் 15 உறுப்பினர்களும், உறுப்பினர் கட்டணம் ரூ. 100 மற்றும் சந்தாக் கட்டணம் ரூ. 500 என, ரூ. 9000 நிதியைத் திரட்டி இந்தியன் வங்கியில் நடப்புக் கணக்கு ஒன்றை எங்கள் தொழிற்குழுவின் பெயரில் தொடங்கினோம். மேலும் எங்கள் குழுவினர் இயற்கை இடுபொருட்களைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறோம்.

### இடுபொருட்கள் உற்பத்தி மற்றும் விநியோகம்

நாங்கள் உற்பத்திச் செய்யும் இடுபொருட்களை திருச்செங்கோடு ஒன்றியத்தில் நடைபெறும் சமுதாயப் பண்ணைப் பள்ளிகளுக்கு வழங்கி வருகிறோம். இப்பள்ளிகளுக்கு வழங்கப்படும் இடுபொருள் பெட்டகத்தில் ரூ.600 மதிப்புள்ள இயற்கை உரங்கள் நிரப்பப்பட்டிருக்கும். இதில் மீன் அமிலம், பஞ்சகவ்யம், ஈயம், மெட்டாரேஷியம், ஊட்டமச்சிய தொழுவுரம், சூடோமோனஸ், மண்புழு உரம் ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

### தொடக்க நிதி மற்றும் வருவாய் ஈட்டல்

எங்கள் தொழிற்குழுவை வளமுடன் செயல்படுத்த, மூலப்பொருட்களை வாங்க தொழில் திட்ட முன்மொழிவை வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு கொடுத்திருந்தோம். அதன் அடிப்படையில் எங்கள் தொழிற்குழுவிற்கு ரூ. 75,000 தொடக்க நிதி வழங்கப்பட்டது. இந்த நிதியில் இயற்கை இடுபொருட்கள் தயாரிக்க மூலப்பொருட்களை வாங்கினோம். இடுபொருட்களைத் தயாரித்து விற்பனை செய்து ரூ. 48,000 வருமானம் ஈட்டியுள்ளோம்.

### மாற்றம் & முன்னேற்றம்

முன்பு நாங்கள் எங்கள் ஊரில் தொழில் வாய்ப்புக்காக காத்திருந்தோம். தற்பொழுது நாங்கள் இயற்கை இடுபொருட்களை (உரங்களை) தயாரிக்க கற்றுக்கொண்டோம், தொழிற்குழுவைத் தொடங்கியுள்ளோம், நிதியுதவி பெற்றுள்ளோம், இயற்கை இடுபொருட்களை உற்பத்திச் செய்துள்ளோம், நல்ல இலாபத்தில் விற்பனை செய்து வருகிறோம். எங்கள் தொழில் வளத்தில் நாங்கள் மேம்பட்டுள்ளோம்.

## ஒன்றுபட்டு உற்பத்தியாளர் குழுவானோம்!
## ஒருங்கிணைந்து உற்பத்தியில் வளமானோம்!



பெயர் : சத்ய ஜீவா
நிறுவனம் : பாச்சல் உற்பத்தியாளர் குழு
ஊராட்சி : பாச்சல்
வட்டாரம் : புதுசத்திரம்
மாவட்டம் : நாமக்கல்

### மகளிர் பின்னணி

என் பெயர் சத்ய ஜீவா, நான் கடந்த 4 வருடங்களாக ரோஜா மகளிர் குழுவில் உறுப்பினராக உள்ளேன். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வழியாக எங்கள் குழுவிற்கு ஒரு தகவல் அறிக்கை கொடுத்தனர். எங்கள் கிராமத்தில் கூட்டம் நடத்தி, உற்பத்தியாளர் குழு அமைப்பது குறித்தும், அதன் பயன்பாடுகள் குறித்தும் சொல்லிக் கொடுத்தனர்.

### உற்பத்தியாளர் குழு தொடக்கம்

எங்களுடைய புலு சமுத்திரம் ஊராட்சி சிறியது என்பதால், பக்கத்தில் இருக்கும் பாச்சல் ஊராட்சியையும் இணைத்து 60 உழவர்களை ஒன்றிணைத்து, உழவர் உற்பத்தியாளர் குழு உருவாக்கப்பட்டது. எங்கள் குழு உறுப்பினர்களிடம் உறுப்பினர் கட்டணமும், ஆண்டு சந்தாவும் திரட்டி அந்தத் தொகையைக் கொண்டு வங்கியில் நடப்புக் கணக்கு ஒன்றை, எங்கள் உற்பத்தியாளர் குழுவின் பெயரில் தொடங்கினோம். அதன் பிறகு எங்கள் குழுவுடன் கலந்து பேசி குழுவிற்கு வேண்டியவற்றை குறிப்பு எழுதி அதை ஒரு முன்மொழிவாக வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு கொடுத்தோம்.

### குழு மேம்பாட்டிற்கு தொடக்க நிதி

இதன் அடிப்படையில் எங்கள் குழுவிற்கு ஈலுஊண திட்டத்திலிருந்து தொடக்கநிதி ரூ. 75,000 வழங்கப்பட்டது. அந்த நிதியில் 3 பவர் வீடர் இயந்திரங்களை வாங்கினோம். அந்த பவர் வீடர் இயந்திரங்களை குழுவிலுள்ள உழவர்களுக்கு 1 மணி நேரத்திற்கு ரூ. 400 என்ற அளவில் வாடகைக்கு விடுகிறோம், இந்த வாடகையின் மூலம் எங்கள் உற்பத்தியாளர் குழுவிற்கு ரூ. 18,000 வருமானம் வந்துள்ளது.

### குழுவிற்கு சமுதாயப் பண்ணைப் பள்ளிப் பயிற்சி

எங்கள் பகுதியில் பாசிப்பயறு, நிலக்கடலை அதிகமாக விளைவிக்கப்படுவதால், அவற்றை கொள்முதல் செய்து, நேரடியாக சந்தையில் விற்பனை செய்து வருகின்றோம். இதற்காக எங்கள் குழுவிற்கு பாசிப்பயறு மகசூலை அதிகரிக்கும் சமுதாயப் பண்ணைப் பள்ளிப் பயிற்சியை ஈலுஊண திட்டத்திலிருந்து வழங்கினர்.

### மாற்றம் & முன்னேற்றம்

தனித்தனி உழவர்களாக செயல்பட்டு வந்த நாங்கள் உற்பத்தி குழுவாக ஒன்றிணைந்தோம்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திலிருந்து தொடக்க நிதி ரூ. 75,000 பெற்றோம். பெற்ற நிதியில் குழுவிற்கு வேண்டிய பவர் வீடர் இயந்திரங்களை வாங்கி அதில் வருவாயை ஈட்டுகின்றோம். ஊீய்றீ பயிற்சியைப் பெற்று உற்பத்தியை அதிகரித்து வருகின்றோம், பாசிப்பயறு உற்பத்தியைக் கொள்முதல் செய்து நேரடியாக சந்தையில் விற்கின்றோம், எங்கள் உழைப்பின் மூலம் நிறைவான பொருளாதாரத்தை ஈட்டி வருகின்றோம்.

# வணிகம் வளர்க...
# மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட உள்ளன.

**செங்கல்பட்டு மாவட்டம்**

| சுய உதவிக்குழுவின் பெயர் | தயாரிப்புப் பொருளின் பெயர் | |
|---|---|---|
| திருமதி. சரஸ்வதி,<br>சிகரம் மகளிர் சுய உதவிக் குழு,<br>சிங்கபெருமாள் கோவில் ஊராட்சி,<br>செங்கல்பட்டு மாவட்டம்.<br>கைபேசி – 82203 18231 | மசாலாப் பொருட்கள் |  |
| திருமதி. நேசம்<br>விண்ணொளி மகளிர் சுய உதவிக் குழு,<br>வெங்கடாபுரம் ஊராட்சி,<br>செங்கல்பட்டு மாவட்டம்.<br>கைபேசி – 84895 86893 | பினாயில் மற்றும் அகர்பத்திகள் |   |
| திருமதி. அனிதா,<br>ரோஜா மகளிர் சுய உதவிக்குழு,<br>குருவன்மேடு ஊராட்சி,<br>செங்கல்பட்டு மாவட்டம்.<br>கைபேசி – 9176176645 | ஆரி வேலைகள் |  |
| திருமதி. சங்கரி,<br>வீரமலர் மகளிர் சுய உதவிக்குழு,<br>முடிச்சூர் ஊராட்சி,<br>செங்கல்பட்டு மாவட்டம்.<br>கைபேசி – 99625 39947 | மூலிகை சானிடரி நாப்கின்கள் |  |
| திருமதி. ஜெரினா,<br>முல்லை மகளிர் சுய உதவிக்குழு,<br>மேடவாக்கம் ஊராட்சி,<br>செங்கல்பட்டு மாவட்டம்.<br>கைபேசி – 90426 76305 | சணல் பைகள் மற்றும் முகக்கவசங்கள் |  |

சமுதாயம் சார்ந்த அமைப்புகளான
மகளிர் சுய உதவிக்குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச்சங்கங்கள்,
ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள்,
பகுதி அளவிலான கூட்டமைப்புகள், தொகுதி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும்
நகர்ப்புர அளவிலான கூட்டமைப்புகளை ஊக்குவிக்கும்

# மணிமேகலை விருதுகள்

தமிழ்நாடு அரசு ஏழை எளிய அடித்தட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்திட, பல்வேறு சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை வகுத்து, அதன் பயன் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், பல்வேறு முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி மக்கள் நல அரசாக விளங்கி வருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் சிறப்பாக செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளான மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள், பகுதி அளவிலான கூட்டமைப்புகள், தொகுதி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புர அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றின் செயல்பாடுகளைப் பாராட்டும் வகையிலும், அந்த அமைப்புகள் மேலும் சிறப்பாக செயல்பட ஊக்குவிக்கும் வகையிலும் அவற்றிற்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2006–07ஆம் ஆண்டு முதல் மணிமேகலை விருதுகள் வழங்கிட ஆணையிட்டதைத் தொடர்ந்து மணிமேகலை விருதுகளை வழங்கப்பட்டு வந்தன. இந்த விருதுகள் சமுதாயம் சார்ந்த அமைப்புகளான சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மேன்மேலும் சிறப்பாக செயல்பட ஊக்குவிக்கும் விதமாக இருந்தன.

இந்நிலையில் சிறிது காலம் கைவிடப்பட்டிருந்த மணிமேகலை விருதுகள் வழங்கும் திட்டமானது மீண்டும் தொடங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 2021–22 ஆம் ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததுடன், மணிமேகலை விருதுகள் வழங்குவதற்காக இரண்டு கோடிரூபாய் ஒதுக்கீடும் செய்தார்கள். இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் சிறப்பாக செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளான மகளிர் சுய உதவிக்குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள், பகுதி அளவிலான கூட்டமைப்புகள், தொகுதி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புர அளவிலான கூட்டமைப்புகளுக்கு வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான மணிமேகலை விருதுகள் வழங்கும் நடவடிக்கைகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

சிறப்பாக செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளை ஊக்குவிக்கவும் செயல்பாடுகளை அங்கீகரிக்கவும் வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் ரொக்க விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மாநில அளவில் தேர்வு செய்யப்படும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ஐந்து இலட்சம் ரூபாயும், பகுதி, தொகுதி மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், சான்றுகளுடன் கூடிய மாநில அளவிலான மணிமேகலை விருதுகளும் வழங்கப்படுகின்றன.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (92,000 Copies Circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.



TNULM

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

*Empowering Lives*

**தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் நகர்ப்புற ஏழை எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது பெருமைக்குரியது.**

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month Posted between 25th – 31th January 2023 Posted at Patrika Channel, Egmore




## தையலில் புதுமை!
## ஒற்றுமையில் பெருமை!

நவீன வாழ்வியலுக்கான புதுமையான சணல் பைகளை உருவாக்கி மகளிர் குழுவினர் தரமுயர்ந்து மேம்பட்டு வருகின்றனர்.





# வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு
(044) 434 43200 | tnrtpstate@gmail.com | www.tnrtp.org
VaazhndhuKaattuvom VaazhndhuKaattuvom tn_rtp